

ශ්‍රී ලංකා දේශීය ආදායම්
இலங்கை உள்நாட்டு இறைவரி
Sri Lanka Inland Revenue

பங்குடமை – வருமான விபரத்திரட்டு மற்றும் அட்டவணைகளை நிரப்புவதற்கான வழிகாட்டி

வரி மதிப்பீட்டாண்டு

2024/2025

இந்த அறிவுறுத்தல் தொகுதி பின்வருவனவற்றை உள்ளடக்கும்;

A. பொது அறிவுறுத்தல்கள்

B. பங்குடமை - வருமான விபரத்திரட்டு மற்றும் அட்டவணைகளை பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

விபரத்திரட்டு மற்றும் அட்டவணைகளை நிரப்புவதற்கு முன்னர் இந்த அறிவுறுத்தல்களை வாசிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். www.ird.gov.lk என்ற உள்நாட்டு இறைவரித் திணைக்கள இணையத்தள முகப்பினூடாக விபரத்திரட்டு மற்றும் வழிகாட்டியினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

A. பொது அறிவுறுத்தல்கள்

1. பங்குடமையானது, அதன் வரியிடற்பாலதான வருமானத்தின் மீது வருமான வரிக்குப் பொறுப்புடையதாவதுடன், மேலதிகமாக ஏதாவது முதலீட்டுச் சொத்துக்களின் தேறிய பெறுகைகளின் ஈட்டத்தின் மீதான வரிக்கும் பொறுப்புடையதாகும்.

2. **விபரத்திரட்டின் வழங்கலும் சமர்ப்பித்தலும்**

வழங்கல்

வருமான விபரத்திரட்டு - 2024/2025 ஆம் வரிமதிப்பீட்டாண்டிற்கு பங்குடமை வருமானத்தின் மீது வருமான வரி அறவிடத்தக்க நபர்களுக்கு, பங்குடமை வருமான விபரத்திரட்டானது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும்

சமர்ப்பித்தல்

2023 ஆம் ஆண்டு 04 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி திருத்த சட்டத்தினால் திருத்தப்பட்ட உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 113 (1ஆ) இன் பிரகாரம், 2023 ஏப்ரல் முதலாம் திகதி ஆரம்பிக்கும் வரிமதிப்பீட்டாண்டு முதல் செயல்வலுப்பெறும் வகையில் ஒவ்வொரு பங்குடமை வரி செலுத்துனர்களும் வரி விபரத்திரட்டுக்களை இ – கோப்பிடல் (இலத்திரனியல் ஊடாக விபரங்களை கோப்பிடல்) கட்டாயமானதாகும்.

அத்தகைய எந்தவொரு பங்குடமைகளும், எழுத்து வடிவில் அச்சிடப்பட்ட குறிப்பிடப்படும் படிவத்தினை சமர்ப்பிப்பதற்கு உரித்துடையவராகமாட்டார்.

முறையாக நிரப்பப்பட்ட விபரத்திரட்டு (பங்குடமை வருமான விபரத்திரட்டு மற்றும் கட்டாயமான அட்டவணைகள்) மற்றும் ஏனைய தேவைப்படுத்தப்படும் ஆவணங்கள், **2025, நவம்பர் 30 ஆம் திகதி** அன்றோ அல்லது அதற்கு முன்னரோ உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு நிகழ்நிலை ஊடாக (இலத்திரனியல் கோப்பிடல்) விபரத்திரட்டினை கோப்பிடல் வேண்டும்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது,பங்குடமை வருமானத் திரட்டு மற்றும் கட்டாயமான அட்டவணைகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வலை தள இ–சேவையினூடாக சமர்ப்பிக்கும் இணையவழி சமர்ப்பிப்பு வசதிகளையும் செய்துள்ளது.

3. வரிக் கணிப்பீடு

பங்குடமையின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் (ஏதேனும் முதலீட்டு சொத்துக்களின் தேறிப் பெறுகையிலிருந்தான ஈட்டுகை தவிர்த்து) மீது கொடுப்பனவு செய்ய வேண்டிய வருமான வரியைக் கீழே தரப்பட்டுள்ள

ஏற்புடைய வரி வீதங்களை பிரயோகித்து கணிப்பீடு செய்தல் வேண்டும்.

வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் (ரூபா)	**வரி வீதம்**
முதல் 1,000 000	0
மீதி	6%

4. வரிக் கொடுப்பனவு

2024/2025 ஆம் வரிமதிப்பீட்டாண்டிற்கு சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வரிக் கூற்றின் பிரகாரம் வரியானது காலாண்டு தவணை அடிப்படையில் செலுத்தப்படுதல் வேண்டும். பின்வரும் அட்டவணையானது 2024/2025 மதிப்பீட்டாண்டுக்குரிய காலாண்டு வரிக் கொடுப்பனவுக்கான செலுத்தப்பட வேண்டிய இறுதி திகதி மற்றும் கொடுப்பனவு காலப்பகுதிக்கான குறியீடு என்பவற்றை விபரிக்கின்றது.

வரித் தவணைக் கொடுப்பனவு	கொடுப்பனவு செய்ய வேண்டிய இறுதி திகதி	கொடுப்பனவு காலப்பகுதிக்கான குறியீடு
முதலாம் தவணை	2024 ஆகஸ்ட் 15	24251
இரண்டாம் தவணை	2024 நவம்பர் 15	24252
மூன்றாம் தவணை	2025 பெப்ரவரி 15	24253
நான்காம் தவணை	2025 மே 15	24254
இறுதிக் கொடுப்பனவு	2025 செப்தெம்பர் 30	24250

நான்கு தவணைக் கொடுப்பனவுகள், இறுதிக் கொடுப்பனவு மற்றும் ஏற்புடையதான வரிவரவுகளின் மொத்தம் என்பவை

2024/2025 வரி மதிப்பீட்டாண்டிற்குரிய மொத்த வரிப் பொறுப்புக்கு சமமானதாக இருத்தல் வேண்டும்.

5. பங்குடமையொன்றின் முதன்மைப் பங்காளர் அல்லது பங்காளர் ஒருவரினால் 2024/2025 மதிப்பீட்டாண்டு தொடர்பாக பங்குடமை வருமானத்திரட்டு மற்றும் அட்டவணைகள் கோப்பிடப்படுதல் அவசியமாகும்.

6. தண்டத்திற்கான ஏற்பாடு

பிழையான அல்லது தவறான விபரத்திரட்டினை கோப்பிடல் அல்லது உரிய திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ விபரத்திரட்டினை கோப்பிட தவறுதல்

- வருமான விபரத்திரட்டினை காலந்தாழ்த்தி கோப்பிடுவதற்கான தண்டம் பின்வருவனவற்றுள் அதிகமான தொகையாக காணப்படும்

  (i) செலுத்த வேண்டிய வரித் தொகையின் 5% வீதத்துடன், மேலும் கோவையிடத் தவறும் ஒவ்வொரு மாதமும் அல்லது மாதத்தின் பகுதிக்கும் செலுத்த வேண்டிய வரியின் 1% வீதம்: மற்றும்

  (ii) ரூபா 50,000/- (நவம்பர் 30 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கப்பட வேண்டிய விபரத்திரட்டு) சமர்ப்பிக்கப்பட தவறும் ஒவ்வொரு மாதமும் அல்லது ஒரு மாதத்தின் ஒரு பகுதிக்கு மேலும் ரூபா 10,000/- உம் ஆன தொகை செலுத்தப்பட வேண்டும்.

- உண்மைக்குப் புறம்பான அல்லது தவறான கூற்றொன்றை வழங்குவதற்கான தண்டனையானது ரூபா 50,000 அல்லது அக் கூற்றினை அடிப்படையாக கொண்டு தீர்மானிக்கப்பட்ட செலுத்த வேண்டிய வரிக்குறைப்புத் தொகை அல்லது

மீளப்பெற வேண்டிய தொகையின் அதிகரிப்பு, ஆகிய தொகைகளில் எத்தொகை அதிகமானதோ அத் தொகையாகும்.

- விபரத்திரட்டினை கோவையிட தவறும் ஆளொருவர் ரூபா 1 மில்லியனை விஞ்சாத தண்டப்பணத்திற்கு அல்லது ஓராண்டு காலத்தை விஞ்சாத சிறைத்தண்டனைக்கு அல்லது அத் தண்டப்பணம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாக வேண்டியேற்படும்.

தவணைக் கொடுப்பனவுகளை உரிய திகதிகளில் செலுத்தத் தவறுதல்

- **ஆளுக்குரிய தண்டப்பணம்**

  I. ஒரு வரிக் காலப்பகுதிக்கு உரிய திகதியன்று அல்லது வரி மதிப்பீட்டு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுத் திகதியன்று செலுத்தப்பட வேண்டிய முழுத்தொகை அல்லது அதன் பகுதி ஒன்றினை செலுத்தத் தவறின் செலுத்தப்படவேண்டிய ஆனால் செலுத்தப்படாத வரியின் 20% இற்கு பொறுப்புடையவராவார்.

  II. சட்டத்தின் கீழ் உரிய திகதியில் தவணைக் கொடுப்பனவு முழுவதையும் அல்லது பகுதி ஒன்றினை செலுத்த தவறின் செலுத்தப்பட வேண்டிய ஆனால் செலுத்தப்படாத வரியின் 10% இற்கு சமனான தண்டப்பணத்தை செலுத்த பொறுப்புடையவராவார்.

- உரிய திகதியில் வரித்தொகை செலுத்தப்படாதிருப்பின், வரிசெலுத்துநர், 151 ஆம் பிரிவுக்கு (செலுத்துகைக்கான கால நீடிப்பு) அமைவாக உரிய திகதியிலிருந்து வரி செலுத்துகின்ற திகதி வரையிலான காலப்பகுதிக்கான

தொகையின் மீது வட்டிக்கு பொறுப்பாவார். வட்டி வீதமானது மாதம் ஒன்றுக்கு அல்லது மாதத்தின் பகுதி ஒன்றுக்கு 1.5% ஆக மாதாந்தம் ஒன்றுதிரட்டப்படுதல் வேண்டும்.

B. பங்குடமை வருமான விபரத்திரட்டு மற்றும் அதனுடன் தொடர்புடைய அட்டவணைகளை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள்

உங்களுக்கு வழங்கப்பட்ட படிவத் தொகுதி பிரதானமாக இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது;

1. **வருமான விபரத்திரட்டு**
2. **வருமான விபரத்திரட்டுக்கான அட்டவணைகள்**

I. வருமான விபரத்திரட்டினைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

- இந்த பகுதி இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது;

  பிரிவு 1 – வருமானம் மற்றும் வரி கணிப்பீடு

  பிரிவு 2 – வெளிப்படுத்தல் .

பிரிவு 1 – வருமானம் மற்றும் வரி கணிப்பீடு

- இந்த பிரிவு நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது;

  பகுதி A - வரிக்கு பொறுப்புடைய வருமானம்

பகுதி B - வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்தான கழிப்பனவுகள்

பகுதி C - செலுத்தப்படத்தக்க வரி கணிப்பீடு

பகுதி D - விலக்களிக்கப்பட்ட தொகைகள்/ஈட்டங்கள் மற்றும் இலாபங்கள்

பிரிவு 2 – வெளிப்படுத்தல்

- விபரத்திரட்டு அல்லது விபரத்திரட்டின் ஒரு பகுதியானது அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் உட்பட எவராவது ஒரு நபரினால் ஒரு கொடுப்பனவுக்காக தயாரிக்கப்பட்டிருந்தால் "ஆம்" எனவும் அவ்வாறில்லையன்றேல் "இல்லை" எனவும் குறிப்பிடுக. "ஆம்" எனக் குறிப்பிடப்பட்டிருப்பின், **வெளிப்படுத்துகையின் பகுதி A** ஐ பூர்த்தி செய்து அந்நபரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்/ சான்றிதழ்களை இணைக்கவும். இது தொடர்பாக ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் தொடர்புபடும் போது மேற்படி விபரங்களை பிறிதொரு இணைப்பில் பூர்த்தி செய்து விபரத்திரட்டுடன் இணைக்கவும்.

- உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 126 (4) ஆம் பிரிவின் பிரகாரம், வரிசெலுத்துநர் அல்லது வரிசெலுத்துநரினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர், விபரத்திரட்டினது செம்மையையும் பூரணத்தன்மையினையும் அத்தாட்சிப்படுத்தி கையொப்பமிடல் வேண்டும்.

  ஆகவே, வரிசெலுத்துநர் அல்லது வரிசெலுத்துநரினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர், **வெளிப்படுத்துகையின் பகுதி B** இல் அவரது பெயரைக் குறிப்பிட்டு விபரத்திரட்டில் (திகதியுடன்) கையொப்பமிடல் வேண்டும்.

II. வருமான விபரத்திரட்டு – அட்டவணைகளை பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

- பின்வரும் அட்டவணைகள், வருமான விபரத்திரட்டுடன் வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை இல.	அட்டவணையின் பெயர்
அட்டவணை - 1	பங்காளர்களினதும் இலாப பங்கினதும் விபரங்கள்
அட்டவணை - 2A	வருமானம் மற்றும் மூலதன ஈட்டுகையின் பகிர்வு
அட்டவணை - 2B	பங்குடமையின் விலக்களிக்கப்பட்ட தொகைகளின் பகிர்வு
அட்டவணை - 3A	மூலதன ஈட்டுகை வரி கொடுப்பனவு விபரங்கள்
அட்டவணை - 3B	முகவரினால் கழிக்கப்பட்ட முற்பண வருமான வரியின் விபரங்கள்
அட்டவணை – 3C	சுய மதிப்பீட்டு வரிக் கொடுப்பனவு விபரங்கள் (மூலதன ஈட்டுகைகள் தவிர்ந்த)
அட்டவணை - 4A	வரி பொறுப்பின் கணிப்பீடு
அட்டவணை - 4B	வரி வரவு

அட்டவணை - 5A	சுய மதிப்பீட்டு வரிக் கொடுப்பனவுகள் மற்றும் மூலதன ஈட்டுகைகள் வரி ஒதுக்கீடு
அட்டவணை - 5B	தகைமையளிக்கும் கொடுப்பனவுகள் மற்றும் முற்பண வருமான வரி (AIT) ஒதுக்கீடு
அட்டவணை - 6	பங்குடமை நட்ட சீராக்கங்களின் விபரங்கள்
அட்டவணை - 7	பங்குடமை வியாபாரத்தின் விபரங்கள்

பங்குடமை வருமான விபரத்திரட்டிற்கான அட்டவணைகள்

1. **அட்டவணை 1 – பங்காளர்களின் விபரங்கள்**

பங்காளர்களின் தேவையான விபரங்களை – பங்காளரின் பெயர், வரி செலுத்துநர் அடையாள இலக்கம் (TIN), தேசிய அடையாள அட்டை இலக்கம், மற்றும் பங்குடமை இலாபம்/நட்டத்தில் பங்காளரின் பங்குவீதம் என்பவற்றை பதிவு செய்து **அட்டவணை 1** இனை பூரணப்படுத்தவும்.

2. **அட்டவணை 2A மற்றும் 2B– பங்குடமை வருமானம், மூலதன ஈட்டுகையின் பகிர்வு மற்றும் விலக்களிக்கப்பட்ட தொகைகள்**

ஒவ்வொரு பங்காளருக்கும் "அட்டவணை 01" இல் தரப்பட்ட அதே ஒழுங்கு வரிசையில் வெவ்வேறு வரிகளைப் பயன்படுத்தவும்.

2.1 அட்டவணை 2A பங்குடமை வியாபார வருமானத்தின் பகிர்வு

நிரல் 205: பங்குடமையினால் ஒவ்வொரு பங்காளருக்கு அல்லது அவர்களது வாழ்க்கைத் துணைக்கு செலுத்தப்பட்ட **சம்பளங்கள், கூலிகள் அல்லது சேவைக்கான கட்டணங்கள்** என்பவற்றின் மொத்த தொகையை பதியவும்.

நிரல் 206: பங்குடமையினால் பங்காளர்களுக்கு செலுத்தப்பட்ட **கடன்கள் அல்லது மூலதனத்தின் மீதான ஏதேனும் வட்டியின்** மொத்த தொகையினை பதியவும்.

நிரல் 207: பங்குடமையின் இலாபத்தைப் பகிரும் வீதத்தின் அடிப்படையில், பங்குடமையின் **வியாபாரத்திலிருந்தான மீதி வருமானத்தின்** ஒவ்வொரு பங்காளரினதும் ஒதுக்கீட்டைப் பதியவும்

நிரல் 208: நிரல் 208 இல் ஒவ்வொரு பங்காளருக்குமான சம்பளங்கள், கூலிகள், சேவைக் கட்டணங்கள், மூலதனம்/கடன் மீதான வட்டி மற்றும் பங்குடமையின் வியாபார வருமானத்தின் மீதி என்பவற்றின் கூட்டுத் தொகையினை பதியவும்.

உதாரணமாக : 205.1+206.1+207.1 ஆகிய கூடுகளின் மொத்தத்தை கூடு 208.1 இல்

205.2+206.2+207.2 ஆகிய கூடுகளின் மொத்தத்தை 208.2 இல்

நிரலின் மொத்த தொகையை கூடு 208.5 இல் பதியவும். அது வியாபார இலாபத்தைக் குறிப்பின், அத்

தொகையினை விபரத்திரட்டின் 10 ஆம் கூட்டில் உள்ளடக்கவும்.

கூடு 208.5 வியாபார நட்டத்தைக் குறிப்பின், அத் தொகையை கூடு 208.5 இல் மறை பெறுமானமாக பதிந்த பின்னர் அத்தகைய நட்டத்தை **அட்டவணை 06** இன் 243.2 ஆம் கூட்டில் பதியவும். விபரத்திரட்டின் 10 ஆம் கூட்டில் "0" எனக் குறிப்பிடவும்.

2.2 பங்குடமை முதலீட்டு வருமானம், ஏனைய வருமானம் மற்றும் முதலீட்டு சொத்தின் தேறிப் பெறுகை மீதான ஈட்டங்கள் என்பவற்றின் பகிர்வு

நிரல் 209: ஒவ்வொரு பங்காளரினதும் முதலீட்டு வருமானம்/ நட்டத்தின் பங்கினை முறையே கூடுகள் 209.1, 209.2, 209.3 மற்றும் 209.4 என்பவற்றில் பதியவும்.

முதலீட்டிலிருந்து ஈட்டத்தை அது குறிப்பிடுவதுடன் 2024/2025 ஆம் வரிமதிப்பீட்டாண்டின் போது முதலீட்டு வருமானத்திற்கு எதிராக கழிக்கப்படற்பாலதான வியாபார நட்டம் எதுவும் இல்லை எனில், அந்த கூடுகளின் மொத்த தொகையை 209.5 ஆம் கூட்டில் பதியவும். அதிலுள்ள தொகையை விபரத்திரட்டின் 20 ஆம் கூட்டில் உள்ளடக்கவும்.

வியாபார நட்டம் காணப்படின், கழிக்கப்படற்பாலதான நட்டமானது 06 ஆம் அட்டவணையின் 243.4 ஆம் கூட்டில் பதியப்படுதல் வேண்டும். என்பதுடன் நட்டத்தைக் கழித்ததன் பின்னரான மீதி முதலீட்டு வருமானத்தினை விபரத்திரட்டின் 20 ஆம் கூட்டில் பதியவும்.

209.5 ஆம் கூடு முதலீட்டிலிருந்து நட்டத்தை

குறிப்பின், அதனை மறை பெறுமானமாக 209.5 ஆம் கூட்டில் பதிவதுடன் அத்தகைய நட்டத்தை 06 ஆம் அட்டவணையின் 244.2 ஆம் கூட்டிற்கு கொண்டு செல்லவும்.
விபரத்திரட்டின் 20 ஆம் கூட்டினை "0" என நிரப்பவும்.

நிரல் 210: ஒவ்வொரு பங்காளரினதும் ஏனைய வருமானத்தின் பங்கினை 210 ஆம் நிரலில் பதியவும். கூட்டுத்தொகையினை 210.5 ஆம் கூட்டிற்கு கொணடு செல்லவும். அதனை விபரத்திரட்டின் 30 ஆம் கூட்டில் பதியவும்

நிரல் 211: வியாபார வருமானம், முதலீட்டு வருமானம் மற்றும் ஏனைய வருமானம் என்பவற்றிலிருந்தான கூட்டுத் தொகையை **நிரல் 211** இல் ஒவ்வொரு பங்காளருக்கும் வெவ்வேறாகப் பதியவும்..

உதாரணமாக: 208.1+209.1+210.1 இனை கூடு 211.1 இற்கும்

208.2+209.2+210.2 இனை கூடு 211.2 இற்கும் பதியவும்.

நிரல் 212 ஒவ்வொரு பங்காளரினதும் முதலீட்டுச் சொத்தின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகை/நட்டத்தின் பங்கினை நிரல் 212 இல் பதியவும். அதன் கூட்டுத்தொகையினை 212.5 ஆம் கூட்டில் பதியவும். அத் தொகை அச்சொத்தின் தேறிப்பெறுகையில் ஈட்டத்தைக் குறிப்பின், விபரத்திரட்டின் 40 ஆம் கூட்டில் அதனைப்

பதியவும்.

212.5 ஆம் கூடு நட்டத்தைக் காட்டின், அந் நட்டத்தை 212.5 ஆம் கூட்டில் மறை பெறுமானமாக பதிவதுடன் விபரத்திரட்டின் 40 ஆம் கூட்டில் "0" எனக் குறிப்பிடவும்.

2.3 அட்டவணை 2B: பங்குடமையின் விலக்களிக்கப்பட்ட தொகைகள்/ ஈட்டுகைகளின் பகிர்வு

நிரல் 213 பங்குடமையினால் ஒவ்வொரு பங்காளருக்கும் (முழு வரி மதிப்பீட்டாண்டிற்கும்) பகிரப்பட்ட விலக்களிக்கப்பட்ட தொகைகள்/ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் என்பவற்றின் பெறுமதியை வெவ்வேறாக நிரல் 213 இல் பதியவும். அந் நிரலின் கூட்டுத் தொகையினை 213.5 ஆம் கூட்டில் பதியவும்.

அது விலக்களிக்கப்பட்ட ஈட்டுகையை காட்டுவதுடன் ஈட்டுகைக்கு எதிராக கழிக்கப்படற்பாலதான நட்டம் எதுவும் இல்லை எனில் அப் பெறுமதியை விபரத்திரட்டின் 130 ஆம் கூட்டில் பதியவும்.

எவ்வாறாயினும், 2024/2025 ஆம் வரிமதிப்பீட்டாண்டில் விலக்களிக்கப்பட்ட வருமானத்திற்கு எதிராக கழிக்கப்படற்பாலதான நட்டம் இருப்பின், அந்த நட்டத்தினை 06 ஆம் அட்டவணையின் 243.6 ஆம் கூட்டில் பதியவும்.

நட்டத்தினைக் கழித்த பின்னரான மீதி விலக்களிக்கப்பட்ட வருமானத்தை விபரத்திரட்டின்

130 ஆம் கூட்டில் பதியவும்.

நிரல்213 A

213.5 ஆம் கூடு நட்டத்தை காண்பிப்பின், அத்தகைய நட்டத்தை 06 ஆம் அட்டவணையின் 245.2 ஆம் கூட்டில் பதியவும்

213 நிரலில் வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான விலக்களிக்கப்பட்ட வருமானம் பற்றிய இயல்புகளை 213A ஆம் நிரலில் வெளிப்படுத்தவும்.

3. அட்டவணை 3: பங்குடமை வருமானத்தின் மீது செலுத்தப்பட்ட வரி

இந்த அட்டவணை முக்கியமாக 3A, 3B, 3C, ஆகிய மூன்று உப அட்டவணைகளைக் கொண்டுள்ளது.

3.1 அட்டவணை 3A: மூலதன ஈட்டுகை வரி தொடர்பான விபரம்

நிரல் 214 : முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப்பெறுகை நடைபெற்ற திகதியை 214 ஆம் நிரலில் உள்ளடக்கவும்.

நிரல் 215 மற்றும் 216 : கொடுப்பனவு திகதிகள் மற்றும் 2024/2025 ஆம் வரிமதிப்பீட்டாண்டில் பங்குடமையின் முதலீட்டு சொத்துக்களின் தேறிப்பெறுகையின் 10% இல் மூலதன ஈட்டுகை வரித் தொகையாக செலுத்தப்பட்ட தொகை, என்பவற்றை முறையே 215, மற்றும் 216 ஆம் நிரல்களில் பதியவும்.

216 ஆம் நிரலின் மொத்த தொகையினை 216.5 ஆம் கூட்டில் பதியவும். அத் தொகையினை 4B ஆம் அட்டவணையின் 235 ஆம் கூட்டில் பதியவும்.

3.2 அட்டவணை 3B: முகவரினால் கழிக்கப்பட்ட முற்பண வருமான வரியின் விபரங்கள்.

முகவரினால் கழிக்கப்பட்ட முற்பண வருமான வரிக் கொடுப்பனவுகள் 217 இருந்து 222 வரையான நிரல்களின் கீழ் தரப்பட்ட வரிகளில் பதியவும். கழிக்கப்பட்ட முற்பண வருமான வரிகளின் மொத்தத் தொகையினை 222.5 கூட்டில் பதிவதுடன் அத்தொகையினை அட்டவணை 4B இன் 236 ஆம் கூட்டில் பதியவும்.

3.3 அட்டவணை 3C: சுய மதிப்பீட்டு வரிக் கொடுப்பனவுகள் (மூலதன ஈட்டுகை வரி தவிர்ந்த)

தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் இறுதிக் கொடுப்பனவுகளின் திகதிகள் மற்றும் செலுத்தப்பட்ட தொகைகளை அட்டவணை 3C

இன் கொடுக்கப்பட்டுள்ள வரிகளில் பதியவும். 228.2 கூட்டின் மொத்தத்தை அட்டவணை 4B இன் 237 ஆம் கூட்டில் பதியவும்.

4. அட்டவணை 4: வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், வரிப் பொறுப்பு மற்றும் வரி வரவுகளை கணித்தல்

அட்டவணை 4A மற்றும் 4B ஆனது வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், வரி பொறுப்பு மற்றும் பங்குடமைக்குரிய வரி வரவுகளை கணிப்பதற்கு வசதியளிக்கின்றது.

4.1 அட்டவணை 4A: வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் மற்றும் வரிப் பொறுப்பு என்பவற்றைக் கணித்தல்

- பங்குடமையின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம்

பங்குடமை வருமானத்தின் முதல் ஒரு மில்லியன் ரூபாக்கள் (முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப்பெறுகை மீதான ஈட்டங்கள் தவிர்ந்த) 0% இல் வரியிடப்படும் மற்றும் மீதி 6% இல் வரியிடப்படும்

- முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகை மீதான வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தை அட்டவணை 4A இன் 233.1 ஆம் கூட்டில் பதியவும். அத்துடன் பங்குடமையின் மீதி வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தை 229 ஆம் கூட்டில் பதியவும்.

- 2024/2025 ஆம் வரிமதிப்பீட்டாண்டிற்கு தகைமையளிக்கும் கொடுப்பனவுகள் இல்லை எனில்

விபரத்திரட்டு அட்டவணை 4A

கூடுகள் 10+20+30 = கூடு 229

கூடு 40 = கூடு 233.1

- **2024/2025** ஆம் வரிமதிப்பீட்டாண்டிற்கு தகைமையளிக்கும் கொடுப்பனவுகள் காணப்படின், மேலே கணிக்கப்பட்டவாறான தொகைகளிலிருந்து விபரத்திரட்டின் 60 ஆம் கூட்டில் பதியப்பட்ட அத்தகைய தகைமையளிக்கும் கொடுப்பனவுகளை கழிப்பதை கருத்தில் கொள்க.

- முதல் ரூபா 1,000,000/- இனைத் தவிர்த்து 229 ஆம் கூட்டில் பதியப்பட்ட தொகையை 231.1 ஆம் கூட்டிற்கு கொண்டு செல்லவும். அதன் மீதான 6% வரியை 231.3 ஆம் கூட்டில் பதியவும்.

230.3 & 231.3 ஆம் கூடுகளின் கூட்டுத் தொகையினை 232.3 ஆம் கூட்டில் பதியவும்.

- **முதலீட்டுச் சொத்தின் தேறிப்பெறுகை மீதான ஈட்டுகையில் வரி**

முதலீட்டுச் சொத்தின் தேறிப்பெறுகை மீதான மொத்த ஈட்டுகை வருமானத்தை கூடு 233.1 இல் பதியவும். அத்துடன் 10% வரி வீதத்தினை பிரயோகித்து வரிப் பொறுப்பினை கணிக்கவும்.

233.3 ஆம் கூட்டிலுள்ள தொகையினை விபரத்திரட்டின் 90 ஆம் கூட்டில் பதியவும்.

4.2 அட்டவணை 4B: வரி வரவு

கிடைக்கத்தக்க வரி வரவுகள் தரப்பட்ட கூடுகளில் பதியப்பட முடியும். (கூடுகள் இல. 234 – 237)

- **வெளிநாட்டு வரி வரவு (கூடு 234)**

வெளிநாட்டு வரி வரவு அடங்கலாக ஏதேனும் வெளிநாட்டு வரி நிவாரணங்களுக்கு உரித்துடையவராயின், அத்தகைய தொகையினை அட்டவணை 4B இன் 234 ஆம் கூட்டில் பதியவும். வரி வரவின் கழிப்பனவானது 80 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

- **முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப் பெறுகையிலிருந்தான ஈட்டுகை மீது செலுத்தப்பட்ட வரி (கூடு 235)**

2024/2025 வரி மதிப்பீட்டாண்டில் முதலீட்டு சொத்துக்களின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகை மீது செலுத்தப்பட்ட மொத்த வரியினை கூடு 235 இல் பதியவும். (அட்டவணை 3A இன் 216.5 ஆம் கூட்டிலுள்ள தொகை)

- **முற்பண வருமான வரி (கூடு 236)**

முகவரொருவரினால் கழிக்கப்பட்ட மொத்த முற்பண வருமான வரி 236 ஆம் கூட்டில் பதியவும்.

- **சுய மதிப்பட்டு வரிக் கொடுப்பனவு (கூடு 237)**

3C அட்டவணையின் 228.2 ஆம் கூட்டில் நான்கு தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் இறுதிக் கொடுப்பனவுகளின் திரட்டிய தொகையை அட்டவணை 4B இன் 237 ஆம் கூட்டில் உள்ளடக்கவும்.

238 ஆம் கூட்டிலுள்ள மொத்த வரி வரவினை பிரதான விபரத்திரட்டின் 110 ஆம் கூட்டில் பதியவும்.

5. பங்காளர்களுக்கு வரிக் கொடுப்பனவுகள், தகைமையளிக்கும் கொடுப்பனவுகள் மற்றும் முற்பண வருமான வரியினை ஒதுக்கீடு செய்தல்

5.1 அட்டவணை 5A: தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் மூலதன ஈட்டுகை வரி

நிரல் 239 : பங்குடமையினால் செலுத்தப்பட்ட தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் இறுதிக் கொடுப்பனவின் கூட்டுத்தொகையை ஒவ்வொரு பங்காளர்களிடையே ஒதுக்கீடு செய்யவும். 239 ஆம் நிரலில் கூட்டுத் தொகை 3C ஆம் அட்டவணையின் 228.2 ஆம் கூட்டின் கூட்டுத்தொகையுடன் சமமானதாக இருத்தல் வேண்டும்.

நிரல் 240 : பங்குடமையினால் செலுத்தப்பட்ட மொத்த மூலதன ஈட்டுகை வரியை ஒவ்வொரு பங்காளர்களிடையே ஒதுக்கவும். 240 ஆம் நிரலில் கூட்டுத் தொகை 3A அட்டவணையின் 216.5 ஆம் கூட்டுத்தொகையுடன் சமமானதாக இருத்தல் வேண்டும்

பங்குடமை வருமானத்தின் மீது பங்குடமையால் செலுத்தப்பட்ட தவணைக் கொடுப்பனவானது, பங்காளருக்கு ஒதுக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், பங்காளருக்கு ஒதுக்கப்பட்ட வரியின் அத்தகைய பங்கின் ஏதேனும் மேலதிகத் தொகையில் அவருக்கு உரித்து கிடையாது. ஆயினும் பங்காளர்கள் அதனை அடுத்த வரிமதிப்பீட்டாண்டில் வரி வரவாக கோருவதற்கு மட்டுமே உரித்துடையவர் ஆவர்.

5.2 அட்டவணை 5B: தகைமையளிக்கும்கொடுப்பனவுகள் மற்றும் முற்பண வருமான வரி (AIT)

நிரல் 241 : பங்குடமையினால் செலுத்தப்பட்ட திரட்டிய தகைமையளிக்கும் கொடுப்பனவுகளை பங்காளர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கவும்.

2024/2025 ஆம் வரிமதிப்பீட்டாண்டிற்கு பங்குடமையினால் மேற்கொள்ளப்பட்ட தகைமையளிக்கும் கொடுப்பனவுகளின் மொத்த தொகையில் ஏதேனும் தரும தாபனத்திற்கு மேற்கொள்ளப்பட்ட பண நன்கொடைகளும்

(சட்டத்தில் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு) உள்ளடக்கப்பட்டிருப்பின், கொடுப்பனவின் கழிப்பனவானது ரூபா 500,000/- அல்லது பங்குடமையின் வரியிடற்பாலதான வருமானத்தின் 1/5 என்பவற்றுள் எது குறைவானதோ அதற்கு வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
அதற்கமைவாக, விபரத்திரட்டின் 60 ஆம் கூட்டில் பதியப்படும் தகைமையளிக்கும் கொடுப்பனவுத் தொகையானது மேற்கூறப்பட்ட சீராக்கலுக்கு உட்படுதல் வேண்டும்.

நிரல் 242 : கழிக்கப்பட்ட முற்பண வருமான வரியை பங்காளர்களிடையே ஒதுக்கீடு செய்யவும். 242 ஆம் நிரலில் கூட்டுத் தொகையானது அட்டவணை 3B இன் 225.5 ஆம் கூட்டின் பெறுமதிக்கு சமமானதாக இருத்தல் வேண்டும்.

6. அட்டவணை 6: பங்குடமை நட்ட சீராக்கலின் விபரங்கள்

2024/2025 ஆம் வரிமதிப்பீட்டாண்டில் உறப்பட்ட வியாபாரம், முதலீடு மற்றும் விலக்களிக்கப்பட்ட நட்டங்களின் விபரங்களை முறையே கூடுகள் 243.2, 244.2 மற்றும் 245.2 என்பவற்றில் பதியவும். நிரல்கள் 3,4 & 6 இனைப் பயன்படுத்தி 2024/2025ஆம் வரிமதிப்பீட்டாண்டிற்குரிய <u>கழிக்கப்படற்பாலதான நட்டங்களினைப்</u> பதியவும்.

7. அட்டவணை 7: பங்குடமை வியாபாரத்தின் விபரங்கள்

246 முதல் 253 வரையிலான கூடுகளை இலாப நட்ட கணக்குகளின் விபரங்களை வெளிப்படுத்த பயன்படுத்தவும். 254 முதல் 260 வரையிலான கூடுகளை பங்குடமையின் ஐந்தொகை விபரங்களை வெளிப்படுத்த பயன்படுத்தவும்.

